0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கோழம்பம்

அருள்மிகு கோகிலேசுவரர் திருக்கோயில்

தலவரலாறு



திருவாவடுதுறை ஆதீனம்

2000

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka

Center for Shaiva Studies, Pondicherry Collection

C0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka

C.S.S.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கோழம்பம் அருள்மிகு கோகிலேசுவரர் திருக்கோயில்

தலவரலாறு



திருக்குட நன்னீராட்டு விழா மலர்

22.3.2000

திருவாவடுதுறை ஆதீனம்

2000

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

உரிமை பதிவு
வெளியீடு எண்:465
விலை ரூபா.5.00

நூலாசிரியர்கள்
மா. சிவகுருநாதபிள்ளை,
சிவ.திருச்சிற்றம்பலம்
சுந்தரபெருமாள்கோவில்.

ஸ்ரீநமசிவாயமூர்த்தி ஆஃப்செட் அச்சகம்,
திருவாவடுதுறை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, K

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்,

இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்,

5.3.2000

வாழ்த்துரை

சமர சூரபன் மாவைத் தடிந்தவேல்
குமரன் தாதைநற் கோமும்பம் மேவிய
அமரர் கோவினுக்கு அன்புடைத் தொண்டர்கள்
அமர லோகமது ஆளுடை யார்களே.

பூம்பொழில்களும் நீர் வய்ல்களும் சூழ்ந்து வளம் பெருகும் திருவூர் திருக்கோழம்பம். ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடைய அரசும் பதிகங்கள் அருளிப் பரவிப் போற்றிய திருத்தலம். மிகப் பழமையான இத்தலத் திருக்கோயில் திருப் பணிகளைப் பெற்றுத் திருக்குட நன்னீராட்டு விழாப் பொலிவு கொள்ளும் இவ் இனிய நாளில் அருள்தரு சவுந்தரநாயகி பங்கமர் அருள்மிகு கோழம்பநாதர் திருக்கோயில் வரலாற்று நூல் மலர்கின்றது. அருள் வரலாற்றுச் சிறப்புடைய இத் தலப் பெருமைகளைச் சுருக்கமாகவேனும் தெரிந்து பயன் கொள் ளும் வண்ணம் எளிய இனிய நடையில் இந்நூல் இயற்றப் பெற் றுள்ளது. பொருள் விளக்கத்துடன் தலத் திருப்பதிகங்களைக் கொண்டு சிறப்புறும் இந்நூலினை அன்பர்கள் பெற்று ஓதி உணர்ந்து உயர் நலன்கள் பெற்றிட அருள அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

பொருளடக்கம்

1.	முன்னுரை	...	
2.	தலம்	...	1
3.	தலவரலாறு	...	5
4.	திருப்பதிகச் சிறப்பு	...	8
5.	தலத் தேவாரத் திருப்பதிகங்கள்	...	24
6.	மற்ற தலப் பதிகங்களில் திருக்கோழம்பம்	...	32
7.	நிறைவுரை	...	35

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, K

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

இப்பூவுலக மக்கள் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நற்பேற்றினைப் பெற, பரமபதியாகிய சிவபெருமான் திருவருளே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளியுள்ள தலங்கள் மிகப் பல வாகும். அவற்றுள் மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் முச்சிறப்புடன் தேவாரத் திருமுறைப் பாடல்களைப் பெற்ற சிவத்தலங்களே நம் சைவ சமயத்தில் முதலிடம் பெற்று விளங்குகின்றன. இவ்வகைத் தலங்கள் நம் பாரத கண்டத்தில் அதிகமாகப் பெற்று விளங்கும் இடம் நம் தமிழகமே ஆகும். மேலும் இத்தமிழ்நாட்டிலே சோனாட்டில் காவிரியின் இருமருங்கும் சிவாலயங்கள் அடுத்தடுத்துக் காணப்படு கின்றன. இத்தகு தேவாரத் தலங்கள் காவிரியின் இரு கரைகளிலும் காவிரிக்கு வடகரையில் 63–ம், தென்கரையில் திருவிடைவாய் உள்பட 128–ம் உள்ளன. இத்தகைய அமைப்பில் காவிரித் தென் கரைத் தலங்களில் 35–வது தலமாக விளங்குவது திருக் கோழம்பம் என்னும் தலமாகும்.

இத்தலத்தின் அருகில் வடக்கே திருவாவடுதுறை கோமுக் தீஸ்வர சுவாமி கோயில் 3 கி.மீ. தொலைவிலும், வடமேற்கே வைகல் மாடக்கோயில் 5 கி.மீ. தொலைவிலும், தெற்கே கோனேரிராசபுரம் என்னும் திருநல்லம் சிவாலயம் 5 கி.மீ. தொலைவிலும், தெற்கே கரு விலிக் கொத்திட்டை சற்குணேசுரர் திருக்கோயில் 8 கி.மீ. தொலை விலும், தென்கிழக்கில் திருவீழிநாதசுவாமி கோயில் அமைந்துள்ள திருவீழிமிழலை 10.கி.மீ. தொலைவிலும் அமைந்து விளங்கு கின்றன.

திருக்கோழம்பம் மயிலாடுதுறை – கும்பகோணம் நெடுஞ் சாலையில் திருவாலங்காடு பேருந்து நிறுத்தத்திலிருந்து தெற்கே 4 கி.மீ. தொலைவில் உள்ளது. மற்றும் காரைக்கால் – கும்பகோணம் நெடுஞ்சாலையில் புதூர் பேருந்து நிறுத்தத்திலிருந்து வடக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

ஒதுவாமூர்த்திகள் எத்தலத்தில் இருந்து தேவாரம் பாடத் தொடங்கினாலும் அத்தலப் பதிகத்தை முதலில் பாடாமல், விநாயக வணக்கமாகத் திருஞானசம்பந்தர் அருளிய திருவலிவலப் பதிகத் திடை வரும், பிடியதனுரு வுமை கொளமிரு கரியது எனத் தொடங்கும் பாடலையும், முருகப் பெருமான் வணக்கமாக இத்தலத்துத் திருநாவுக்கர சர் பதிகத்திடை வரும் சமர சூரபன் மாவைத் தடிந்தவேல் முமரல் தாதை எனத் தொடங்கும் பாடலையும் பாடுவதை மரபாகக் கொண்டுள் ளனர்.

திருக்கோழம்பநாதர் திருக்கோயில் பல நூற்றாண்டு களுக்கு முன்னர், பல சிவாலயங்களை முன் நின்று திருப்பணி செய்த சிவபக்தியில் சிறந்து விளங்கிய செம்பியன் மாதேவியாரால் திருப் பணி செய்யப் பெற்று நித்திய நைமித்தியங்கள் சிறப்புற நிகழ்ந்து வந்தன. கால வெள்ளம் கடந்து சென்றமையால் பிற்காலத்தில் சிதில மடைந்து விட்டது. நாகை மாவட்டம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் புலியூர் உடையான் அவர்கள் தலைமையில் 26.8.1970–ல் இக்கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. பின்னர் கோழம்பநாதரின் குறைவிலா நிறையருளால் 24.8.1998ல் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானம் அவர்களும், தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நி தானம் அவர்களும், சூரியனார்கோயில் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானம் அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்களும் இத்திருக்கோயில் திருப்பணியைத் துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மயிலாடுதுறை மண்டல இணை ஆணையர் திரு. தனபால் அவர்களும், செயல் அலுவலர் திரு. கலியபெருமாள் அவர் களும் முன்னின்று ஊக்குவித்தார்கள். இத்திருக்கோயிலுக்கென நான்கரை மா நன்செய் நிலம் உள்ளது.

இத்திருக்கோயிலின் நித்திய பூசைக்கென திருவாவடு துறை ஆதீனம் குரு மகாசந்நிதானம் அவர்கள் மாதந்தோறும் திட்டத் தொகை அளித்து வருகின்றார்கள். தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் தமது ஜென்ம நட்சத்திரமாகிய ஆயில்ய நாளன்று [1.6.79] இத்தலத்தின் வரலாறும் திருநல்லம் என்னும் கோனேரிராஜபுரத்தின் வரலாறும் அச்சிட்டு வழங்கியுள்ளார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ ஏஜமான் சுவாமிகள் அவர்கள் ஆண்டுதோறும் தீபாவளி நாளில் சுவாமி அம்பாளுக்கு பரிவட்டம் வழங்கிவருகிறார்கள். மேலும் சிவராத்திரி தோறும் சுவாமி அம்பாளுக்குப் பரிவட்டம் வழங்குவதோடு சந்தனக் கட்டையும் பூசைக்காக வழங்கிவருகிறார்கள். மேலும் மாதந்தோறும் திட்டத்தொகையும் வழங்கிவருகிறார்கள். திருக்கோழம்பம் ஏ. சம்பந்தம் பிள்ளை கார்த்திகை மாதம் 2–ஆம் சோமவார உபயம் செய்கின்றார். கருப்பூர் முன்னாள் பஞ்சாயத்துத் தலைவர் முருகானந்தம் 3–ஆம் சோமவார உபயம் செய்கிறார். திருக்கோழம்பம் ஷண்முகம் என்பவர் 4–ஆம் சோமவார உபயம் செய்கிறார். மல்லார்பேட்டை ராஜேந்திரன் என்பவர் அபிடேகத்துக்காகப் பெரிய பித்தளைக்குடம் உபயம் செய்துள்ளார்கள். கோயம்புத்தூர் திருப்பணிக்குழு உறுப்பினர் வசந்தகுமார் என்பவர் மாதந்தோறும் பூசைக்காகத் திட்டத் தொகை வழங்கி வருகிறார். நித்திய பூஜைக்காக அரசாங்கம் திட்டம் வழங்கி வருகிறது. சென்னை சூளைமேடு வி. சேகர் என்பவர் திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் தேவாரப்பதிகம் ஒன்றும் கல்வெட்டுச் செய்து இத்திருக்கோயிலில் பதித்துள்ளார். மேலும் சிவராத்திரி தோறும் பூஜைக்காக திட்டத்தொகை வழங்கி வருகிறார். திருச்சி சிவாஜகன் என்பவர் திருக்கோயில் தண்ணீர் உபயத்துக்காக அடிபம்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இந்த அன்பர் யாகசாலை பூஜை உபயமாக நிதி அளித்துள்ளார்.

இத்திருக்கோயில் ராஜகோபுரத்தில் பஞ்ச மூர்த்திகளின் சுதை வேலைப்பாடு சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீனம் ராஜகோபுரக் கதவுக்காகவும் சுவாமி கோயில், அம்பாள் கோயில் திட்டி வாசல் கதவுகளுக்காகவும் பலகைகள் வழங்கியுள்ளது. மேலும் சுவாமி கோயில் அம்பாள் கோயில் கற்பக்கிருகத்திற்கு மேல் விதானம் அமைப்பதற்கு வேண்டிய பலகைகளும் கொடுத்துள்ளது. இக்கோயிலின் திருப்பணிக்காக இவ்வாதீனம் நிதி வழங்கியுள்ளது.

இத்திருக்கோயிலில் மார்கழி மாதத்தில் மகாவியதிபாத புண்ணிய காலத்தில் சுவாமியை எழுந்தருளச் செய்து அருகில் அமைந்துள்ள கௌரி தீர்த்தத்தில் தீர்த்தவாரி சிறப்பாக நடைபெற்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

வந்துள்ளது. திருக்கோயில் அனைத்து மூர்த்திகளுக்கும் திருவாவடுதுறை ஆதீனம் செலவில் அஷ்டபந்தன மருந்து தயார் செய்து சாத்தப்படுகிறது. நிகழும் குடமுழுக்கு விழாவில் கோழம்பநாதர் திருக்கோயில் தலவரலாற்று நூலை திருவாவடுதுறை ஆதீனம் விழா மலராக அச்சிட்டு வெளியிடுகிறது. சிவாலயப்பணி என்றால் கங்கணம் கட்டிக்கொண்டு முன் நின்று செய்துவரும் சிவபுண்ணியச் சீலராகிய கோயம்புத்தூர் சிவாலயத் திருப்பணிச் சக்கரவர்த்தி இரா. வசந்தகுமார் அவர்களும், சிதம்பரம் டாக்டர்.க.நடராஜன்,எம்.எஸ்., அவர்களும் கோயம்புத்தூர் இரா. சந்திரசேகரன் அவர்களும், கோயம்புத்தூர் கு. கோவிந்தராசன் அவர்களும், சங்கரன்கோயில் கோமதியம்மை மாதர் கழகத்தினரும் இக்கோயில் திருப்பணிக்கு வேண்டும் பொருளுதவி செய்து திருப்பணியை முற்றுப்பெறச் செய்துள்ளார்கள்.

இந்நூல் எழுதி வெளியிடக் காரணகர்த்தாவாக இருப்பவர்கள் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் 23–ஆவது குரு மகாசந்நிதானமாக இருந்தும் சைவ பரிபாலனமும், வித்தியா பரிபாலனமும் செய்துவரும் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். திருக்கோயிலின் பெருமையை யாவரும் உணர்ந்து நன்னெறிப்படவேண்டுமென்பது குரு மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளம். தங்கள் ஆட்சிக்குட்பட்ட கோயில்களின் வளர்ச்சியில் மட்டுமின்றி மற்றைய துறை ஆலயங்களின் வளர்ச்சியில் கருத்துடைய குரு மகாசந்நிதானம் அவர்கள் இத் திருக்கோழம்பத் தலவரலாற்றை விளக்கத்துடன் எழுதிப் பதிப்பித்து பிரமாதி ஆண்டு பங்குனி மாதம் 9–ஆம் தேதி [26.3.2000] புதன் கிழமை அடியவர்கட்கு அருள்பாலித்து வழங்குகிறார்கள். இத்தகைய அருள் நூலை யாங்கள் உய்ய எழுத அருள்பாலித்த சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானத்தின் பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்குகின்றோம். உமாதேவியாகிய நம் பெருமாட்டிக்கு அருள்பாலித்த பெருமான் கோழம்பநாதரின் அருள் பெற சிவநேயச் செல்வர்கள் இதனைப் படித்து குருவருளும் திருவருளும் பெற்று உய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

மா. சிவகுருநாதபிள்ளை,
சிவ. திருச்சிற்றம்பலம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

திருக்கோயில் வரைபடம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

திருக்கோழம்பம்
திருக்கோயில் பட விளக்கம்

1. கீழ கோபுர வாயில்
2. பலிபீடம், நந்தி
3. உள்கோபுரம்
4. மகா மண்டபம்
5. கருவறை
6. சோமாஸ்கந்தர் இருக்கை
7. விநாயகர்
8. நடராஜர் (சிலா)
9. அகத்தியர்
10. சட்டைநாதர்
11. தென்முகக் கடவுள்
12. தலமரம்
13. நிருதி விநாயகர்
14. திருநாவுக்கரசர்
15. சுப்பிரமணியர்
16. பிரமலிங்கம்
17. மகாலட்சுமி
18. இலிங்கோத்பவர்
19. பிரமன்
20. மாதொருபாகன்
21. துர்க்கை
22. சுரஹரேசுவரர்
23. திருமஞ்சனக் கிணறு
24. சண்டிகேசுரர்
25. ஆடல்வல்லான் இருக்கை
26. பைரவர்
27. சூரியன்
28. அம்மன் சந்நிதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கோழம்பம்

அருள்மிகு கோகிலேசுவரர்

திருக்கோயில் தலவரலாறு

திருச்சிற்றம்பலம்

கயிலை நன்மலை ஆளுங் கபாலியை
மயிலி யல்மலை மாதின் மணாளனைக்
குயில்பயில் பொழிற் கோழம்பம் மேயவென்
உ'யிரி னைநினைந் துள்ளம் உருகுமே.

திருச்சிற்றம்பலம்

பூமகளின் திருமுகமாய் விளங்கும் நம் பரத கண்டம் தெய்வ மணங் கமழும் கோயில்களையும் புண்ணிய தீர்த்தங்களையும் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறையப் பெற்றுள்ளது. இத்தகைய பரத கண்டத்தின் திலகமாய்த் திகழும் தமிழ்நாடு *தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!* எனும் மணிவாசகத்திற்கு இணங்க சிவனுறையும் கோயில்களை எங்கு பார்க்கினும் சிவமணங் கமழ அடையப் பெற்று இருக்கிறது. இத்துடன் இதன் நடுவில் உள்ள சோணாடு அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலத்தையும் பொன்னம் பாலிக்கும் பொன்னியாகிய காவிரி நதியையும் மற்றும் இடைமருது, ஐயாறு, மயிலாடுதுறை, குடந்தை முதலிய சிவத்தலங்களையும் பெற்று விளங்க, இதனிடை சிவராஜதானியாகிய திருவாவடுதுறைக்குத் தெற்கில் உமாதேவியார் பசுவடிவாய் இருந்து அருள் பெற்ற திருக் கோழம்பம் என்னும் சிவத்தளியும் இருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

தலத்தின் இருப்பிடம்

இத்திருக்கோழம்பச் சிவப்பதி கும்பகோணம் – காரைக்கால் பெருவழிச் சாலையில் புதூருக்கு வடக்கிலும்; கும்பகோணம் – மயிலாடுதுறைப் பெருவழியில் கழுமலவூர்க்கு அம்பொன் ஆயிரம் அளித்த திருவாவடுதுறைக்குத் தெற்கில் வீரசோழன் ஆற்று தென்கரையில் இருக்கிறது. இத்தலம் திருவாரூர் மாவட்டத்தில் நரசிங்கன்பேட்டை புகைவண்டி நிலையத்தில் இருந்து தென்கிழக்கே 4 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. மயிலாடுதுறையில் இருந்து பேராவூர் செல்லும் நகரப் பேருந்தில் திருவாலங்காடு – திருவாவடுதுறை வழியாகச் சென்று மல்லார்பேட்டையில் இறங்கி தெற்கே ஒரு கிலோமீட்டர் தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். கும்பகோணம்– காரைக்கால் வழியில் பேருந்தில் வருவோர் புதூரில் இறங்கி வடக்கே 2 கிலோமீட்டர் தூரம் வந்தால் இத் தலத்தை அடையலாம்.

சுற்றியுள்ள தலங்கள்

சிற்றூர் வடிவில் உள்ள இத்தலத்தைச் சுற்றி திருநல்லம் [கோனேரிராஜபுரம்], வைகல் மாடக்கோயில், திருநீலக்குடி, தென்குரங்காடுதுறை, திருவீழிமிழலை, திருமீயச்சூர் ஆகிய தேவாரப் பதிகளும், பேராவூர் எனும் தேவார வைப்புத் தலமும் இருக்கிறது.

கோயில் அமைப்பு

சுற்றிலும் நான்கு வீதிகள் அமையப் பெறாத இத்தலம் ஊரின் வடபால் முன்னால் ஒரு திருக்குளம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

இருக்க அமைந்துள்ளது. இரண்டு கோபுர வாயில்களையும் இரண்டு திருச்சுற்றுக்களையும் உடைய இக்கோயிலின் முன் கோபுரம் முற்றுப் பெறாமல் இருக்கிறது.

இதன் வழி உள்ளே நுழைந்ததும் முதல் திருச் சுற்றின் முன் நந்தி, பலிபீடமும், இதனை அடுத்து தெற்கு முகப் பார்வையில் இத்தல நாயகியாகிய அருள்தரு சவுந்தரநாயகி அம்மையின் கோயில் உள்ளது. பின் இரண் டாங் கோபுர வாயிலினைக் கடந்தால் மிகப் பெரிய பரப்பை யுடைய மண்டபத்தில் வடபக்கம் தில்லைக்கூத்தன் அமரு மிடமும் ஈசான்ய மூலையில் சூரியனும் பைரவரும் அமர்ந் தருளும் இடமும் இருக்கின்றன.

பின் இந்த உள் திருச்சுற்றில் பெருமான் வீற்றிருக் கும் கருவறைக் கோயிலின் தென்பக்கம் முறையே பிள் ளையார், அகத்தியர், சிலாவடிவ நடராசர், சட்டைநாதர், தெட்சிணாமூர்த்தி வடிவங்களும், மேற்குப் பத்தியில் நிருதிவிநாயகர், அப்பர், வள்ளி, தேவசேனையுடன், முரு கனும், பிர்மலிங்கமும், மகாலட்சுமியும், பின் கருவறை யின் வடபக்கம் பிரமன், அர்த்தநாரீசுவரர், துர்க்கை, சுரசுரேசுவரர், சண்டேசுரர் முதலிய திருவடிவங்களும், திருமஞ்சனக் கிணறும் உள்ளன.

மூர்த்திகள்

இத்தலத்தில் ஏகநாயகனாகிய சிவபரம்பொருள் கோகிலேசுவரர், கோழம்பநாதர் என அழைக்கப்பட்டு நெடிய பாண வடிவில் விளங்குகிறார். தலவரலாற்றின்படி பசு வடிவாய் அம்மை பூசித்ததை எடுத்துக்காட்ட பசுவின் கால் குளம்புகளின் அடையாளம் பெற்று காணப்படுகிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

தல நாயகியாகிய அம்மை சவுந்தர நாயகி, அழகமர் நாயகி என்னும் திருப்பெயருடன் நான்கு திருக் கரங்களுடன் விளங்குகிறாள். அனைத்து விழா மூர்த்தி களும் [உற்சவமூர்த்திகளும்] இத்திருக்கோயிலுக்கு இருப்பினும் பாதுகாப்பின் பொருட்டு பிறிதோர் சிவத்தலக் கோயிலில் வைக்கப் பெற்றுள்ளது.

தலமரம் (விருட்சம்)

மிக்க பழம் காலத்தே நம் முன்னோர்கள் தங்கள் வழிபாட்டிற்குரிய தெய்வத் திருமேனிகளை மரத்தடியில் வைத்து வழிபட்டு வந்தனர். பின்னர் கால முன்னேற்றத் திற்கு ஏற்ப இத்திருமேனிகட்கு கோயில்களை அமைத்த பின் பண்டு இருந்து மரங்கள் அக்கோயிலினுள் வளர்க்கப் பெற்று தலவிருட்சம் என அழைக்கப் பெற்றன. அவ் வகையில் இத்தலத்தில் வில்வமரம் தல விருட்சமாக உள்ளது. முல்லைக்கொடியும் தலவிருட்சம் எனக் கூறுவர்.

தீர்த்தங்கள்

நீராடியோர் உடற்பிணியையும், பிறவிப் பிணியை யும் போக்கும் கிணறு, குளம், அருவி, ஆறு, கடற்றுறை முதலிய நம் நாட்டில் கோயிலை அடுத்து சிவ வடிவில் விளங்குகின்றன. இதனை ...சென்றாடு தீர்த்தங்கள் *ஆனார் தாமே திருவாலங்காடுடைய செல்வர்தாமே* எனப் அருள்கிறார் அப்பரடிகள். இத்தகைய தீர்த்தமாக முன்னால் உள்ள படித்துறைகள் அமையாத சிறு குளம் ஒன்று பிர்ம தீர்த்தம் என்னும் பெயரில் இருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

தல வரலாறு

இக்கோயிலின் பண்டைப்புகழைப் பற்றி இயம்ப வடமொழியிலோ தமிழிலோ நூல்கள் எதுவும் இல்லை. செவிவழிச் செய்திகளாகவோ, கற்பனையாகவோ கூறுவதற்கில்லை. ஆனால் உலக அன்னையாகிய உமா தேவியார் கோ [அதாவது] பசு வடிவாய் இருந்து பூசித்துப் பேறு பெற்றார் எனத் தலப் பெயரினைக் கொண்டு அறிய முடிகிறது.

திருக்கயிலையில் ஒரு சமயம் உமாதேவியார் பரமனை நோக்கி அவருக்கு விருப்பமுடையது எதில்? என வினவ, அதற்குப் பெருமான் கூறியதைக் காட்டும் பெரியபுராணப் பாடலாவது;

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை என உரைத்தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து.

[பெ.பு – தி.கு.பு–பாடல் 51]

இவ்வாறு பெருமான் உரைக்கக் கேட்ட பெருமாட்டி இப்பூவுலகில் காஞ்சிமா நகரத்திற்கு வந்து கம்பை மணலால் சிவ உருவை உண்டாக்கிப் பூசித்தாள். இதுவே கச்சிமாநகர் ஏகம்பம். அம்மையார் பூசித்தமர்ந்ததே கச்சிக் காமகோட்டமாகும். இவ்வாறு அம்மையார் பூசித்த இடங்கள் இந்நில உலகில் பலவாகும். திருவானைக் காவில் காவிரி நீரால் சிவலிங்கம் அமைத்துப் பூசித்து அகிலாண்டேசுவரி எனப் பெயர் பெற்றாள் அன்னை. இன்னும் திருநல்லம், பந்தனைநல்லூர், ஆவூர் பசுபதீச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

சுரம், திருக்கொண்டீச்சரம், கரூர் முதலிய தலங்களும் சொல்லப்படும்.

இவ்வாறு தம் சுய வடிவுடனன்றி மயில் வடிவா யிருந்து அம்மையார் பூசித்த இடங்கள் சென்னை மயிலாப் பூர், காவிரிக்கரை மயிலாடுதுறை முதலியன ஆகும். இதுபோல் புனித பசு வடிவாய் இருந்து பூசித்த தலங்கள் திருவாவடுதுறையும், கோழம்பமும் ஆகும். திருவாவடு துறைக்கு கோ + கழி எனும் பெயர் உண்டு. கோ – பசு பூசித் ததால் திருக்கோழம்பம் எனப் பெயர் பெற்றது. இவ்வாறு கோ [பசு] வடிவில் அம்மையார் பூசித்த சிறப்பினைத் திருவாவடுதுறைப் புராணம் விளக்கமாகக் கூறும்.

பிரமன் பூசித்தது

திருமாலும், நான்முகனும் தாம்தாம் பெரியர் என வாதிட்டு சிவபிரானிடம் அணுகினர். அது சமயம் சிவ பிரான் மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையில் நெடிய எரி வடிவாய் நின்று திருமாலை தன் திருவடியைக் கண்டு வருமாறும்; நான்முகனைத் தன் முடியைக் கண்டு வரு மாறும் பணித்தார்.

இதற்கிணங்க திருமால் பன்றி வடிவில் பூமியை நெடிது தூரம் தோண்டியும் பெருமானின் திருவடியைக் காணாது *காண முடியவில்லை* எனப் பெருமானிடம் உண்மையை உரைத்தார். ஆனால் பிரமனோ அன்ன வடிவில் விண் முட்ட நெடிது தூரம் பறந்து திருமுடியைக் காணாது வந்து *திருமுடியைக் கண்டேன்* என பொய்யுரை பகன்றார். *[வண்ண மலரானும், வையம் அளந்தானும் நண்ணல் அரியானை* – நல்லூரில் சம்பந்தர் பாடல்]

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,



உமையம்மை பசு வடிவில்
இறைவனைப் பூசித்தல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,



வித்தியாதரன் குயில் வடிவில்
சிவபெருமானை பூசித்தல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

இதனால் பொய்யுரைக்காக பெருமானிடம் தண்டனை பெற்ற பிரமன் இத்தலத்திற்கு வந்து தன் பெயரால் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி நீராடி, கோழம்ப மேவிய பெருமானின் திரு உருவை அமைத்து நற்பேறு பெற்றார். இவர் இவ்வாறு நிறுவி பூசித்த இலிங்கம் இக்கோயிலினுள் முருகப் பெருமான் சந்நிதிக்கு வடப்பக்கம் உள்ளது. நீராடிப் பேறு பெற்ற தீர்த்தந்தான் கோயிலுக்கு முன் பிரம தீர்த்தமான சிறு குள வடிவாய் உள்ளது.

சந்தன் பூசித்தது

சந்தன் என்னும் வித்தியாதரன் தேவேந்திரனால் குயிலாய்ப் போகுமாறு சாபம் பெற்றான். இந்த சாப நீக்கம் பெற குயில் வடிவத்துடன் அவ்வித்தியாதரன் இத்திருக் கோழம்பத்திற்கு வந்து நியமத்துடன் பன்னாள் பூசித்துத் தனக்குற்ற தேவேந்திரனது சாபம் நீங்கி சுய வடிவு பெற்றுய்ந்தான்.

இவ்வாறு இவ்வித்தியாதரன் குயில் வடிவத்துடன் [கோகில வடிவத்துடன்] இத்தலத்தைப் பூசித்துப் பேறு பெற்றமையால் இங்கு இப்பெருமான் கோகிலேசுவரர் என்றும் தலத்திற்கு கோகிலாபுரம் என்றும் பெயர் வழங்கலாயிற்று. இவ்வரலாற்றை அரண் செய்யும் வகையில் இத்தலத்தின் நாவுக்கரசர் பதிகத்திடை வரும்,

கயிலை நன்மலை ஆளுங் கபாலியை
மயிலியல் மலைமாதின் மணாளனை
குயில் பயில் பொழில் கோழம்பம் மேவியஎன்
உயிரினை நினைந்து உள்ளம் உருகுமே

என்னும் பாடலால் அறியலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

இந்திரன் பூசித்தது

தேவர்கோனாகிய இந்திரன் தனக்கு அகலிகை யின் காரணத்தால் ஏற்பட்ட கௌதமரின் சாபநீக்கத்திற்காக தலம் பலவற்றைத் தரிசித்து வந்தபோது இக்கோழம்பமேய கண்ணுதலாரையும் முறைப்படி பூசித்தான்.

இன்னும் பல விண்ணாளும் தேவர்களும் மண் ணுலக முனிவர்களும் இக்கோகிலேசுவரரை வழிபட்டு நற்கதி பெற்றுள்ளனர்.

திருக்கோழம்பப் பதிகச் சிறப்பு

மூவர் முதலிகளால் பாடப் பெற்ற தேவாரத் திருத் தலங்கள் இருநூற்று எழுபத்து ஐந்தனுள் நாளும் இன்னி சையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தப் பெருந்தகை யாலும், நற்றமிழ் வல்ல நாவினுக்கரையராலும் பாடல் பெற்ற திருத்தலங்கள் ஐம்பத்து இரண்டாகும். அவற்றுள் நாற்பத்தொரு திருத்தலங்கள் சோழநாட்டின் கண் அமையப் பெற்றுள்ளன. திருக்கோழம்பமும் அவ்விரு பெருமக்களால் பாடப்பெற்ற மாண்பினையுடையதாகும்.

திருஞானசம்பந்தருடைய இத்தலப் பதிகம் அவர் இயற்றியருளிய இரண்டாந் திருமுறையின்கண் அமையப் பெற்றுள்ளது. அத்திருமுறையின்கண் இடம் பெற்றுள்ள இந்தலப் பண்ணாலாய பதிகங்கள் முப்பத்து ஒன்பதனுள் திருக்கோழம்பப் பதிகமும் ஒன்றாய் அமையப் பெற்று பதினொரு பாடல்கள் உடையதாய் காணப்பெறுகின்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding, Tattva Heritage Foundation,

திருநாவுக்கரசருடைய திருக்குறுந்தொகைப் பதிகம் ஐந்தாந் திருமுறையின்கண் பதினொரு பாடல்களுடன் அமையப்பெற்றுள்ளது. அவ்விரு பதிகங்களால் அறியப்பெறும் திருக்கோழம்ப மூர்த்தி, தலம், தீர்த்தப் பெருமைகளை ஈண்டுக் காண்போம்.

திருமுருகன் மாண்பு

சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு அருளிச் செய்யப் பெற்றுள்ள தேவாரத் திருமுறைப் பாடல்களுள் திருமுருகனைப் பற்றிய குறிப்புகள் ஐம்பது பாடல்களுள் காணப்பெறுகின்றன. அவற்றுள் திருஞானசம்பந்தருடையனவாய் பன்னிரு பாடல்களும், திருநாவுக்கரசருடையனவாய் இருபத்து மூன்று பாடல்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுடையனவாய் பதினைந்து பாடல்களும் அமைந்துள்ளன. அவற்றுள் முப்பத்து மூன்று திருத்தலங்கள் அமைந்துள்ளன. அத்திருத்தலங்களுள் ஒன்றாய்த் திகழும் திருக்கோழம்பத் திருப்பதிகத்தின் பத்தாவது பாடலின்கண், *சமர சூரபன் மாவைத் தடிந்தவேற் குமரன் தாதை...* என்ற தொடரின் வாயிலாகப் போர்க்களத்தின் கண் சூர பதுமனைத் தடிந்த வெற்றிவேலினைக் கையில் கொண்ட குமரனின் தாதையாகத் திருக்கோழம்பத்தின் கண் மேவிய அமரர் கோவாகச் சிவபெருமான் சூட்டப் பெற்றுள்ளார்.

குமரன் தாதை

சிவபரம்பொருளைக் குமரன் தாதையாகச் சம்பந்தரும் நாவரசருமாக நான்கு பாடல்களில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

வள்ளி முலைதோய் குமரன்தாதை

அரிசிற்கரைப்புத்தூர் 2–63–2

வேற்குமரன் தாதை

திருக்கோழம்பம் 5–64–10

கூர்இலங்கு வேற்குமரன் தாதை

குடந்தைக் கீழ்க்கோட்டம் 6–42–6

குமரன் தாதை

திருநெய்த்தானம் 6–75–7

சூரன் வதம்

சிவன் பெரும் சக்தி வடிவமான முருகப் பெருமான் சூரபத்மனை வதம் செய்து அருளிய செய்தி தேவார மூவராலும் ஐந்து தேவாரப் பாடல்களுள் குறிப்பிடப் பெற்றுள்ளமை குறிக்கத் தக்கதாகும்.

மாயச்சூர் அன்றறுத்த மைந்தன்

மீயச்சூர் 2–62–3

சூரட்ட வேலன்

திருவதிகை 4–104–5

சமரசூரபன்மாவைத் தடிந்த வேற்குமரன்

திருக்கோழம்பம் 5–64–10

சூர்தடிந்திட்ட செட்டி

ஆரூர் 7–54–10

சூர் தடிந்திட்ட சேந்தர்

திருத்திணை நகர் 7–64–6

அகத்துறைப் பாடல்

சிவபெருமானைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு பாடப் பெற்ற பதிகப் பாடல்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

அகத்துறைப் பாடல்களாகக் கருதப்பெறும். அவ்வகை யான பாடல்கள் பலவற்றுள் ஒன்றாகத் திருக்கோழம்பத் திருக் குறுந்தொகையின் நான்காவது பாடல் திகழ்கின்றது.

பாடலாக் கிடும் பண்ணொடு பெண்ணிவள்
கூடலாக் கிடும் குன்றின் மணற்கொடு
கோடல் பூத்தலர் கோழம்பத்துள் மகிழ்ந்
தாடும் கூத்தனுக் கன்புபட்டா ளன்றே.

என்னும் பாடல் தலைவனுக்கு அன்புபட்ட தலைவியின் நிலை குறித்து நற்றாய் இரங்கல் கூற்றாக அமையப் பெற் றுள்ளமை காணலாம்.

தன்னிலை விளக்கப் பாடல்கள்

திருநாவுக்கரசருடைய திருக்குறுந்தொகைப் பாடல்கள் மூன்று தன்னுணர்வு நிலை வெளிப்பாட்டு நிலையில் அமையப்பெற்றுள்ளமை அறிந்து இன்புறத் தக்கதாகும்.

.... கோழம்பம் மேய
என் உயிரினை நினைந்துள்ளம் உருகுமே 5-64-2

முன்னை நான்செய்த பாவம் முதல் அறப்
பின்னை நான் பெரிதும் அருள் பெற்றதும்
5-64-7

ஏழை மாரிடம் நின்றிரு கைக்கொடுண்
கோழை மாரொடும் கூடிய குற்றமாம்
கூழைபாய் வயல் கோழம்பத் தானடி
ஏழையேன் முன் மறந்துங் கிருந்ததே.
5-64-8

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

அடியார் இயல்பு

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று அழுது காமுற்று அரற்றுகின்ற அடியார் இயல்புகளாகவும் அடியரல்லாதார் இயல்புகளாகவும் சிலவற்றை இத்தலத் திருக்குறுந்தொகைப் பதிகம் சுட்டிக் காட்டியுள்ளது.

கோழம்பத் துறை கூத்தன் குரைகழல்
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே 5-64-1

அமரர் கோவினுக்கு அன்புடைத் தொண்டர்கள் 5-64-10

என்று அன்புடைத் தொண்டர்களைச் சிறப்பித்துப் பேசும் நாவுக்கரசர்

வேழம் பத்தைவர் வேண்டிற்று வேண்டிப் போய்
ஆழம் பற்றி வீழ்வார் பல ஆதர்கள் 5-64-1

என்று அடியரல்லார் புன்மையை விளக்கிக் காட்டியுள்ளார்.

சிவ வடிவங்கள்

திருக்கோழம்பத் திருப்பதிகங்கள் பல்வேறு சிவ வடிவங்களையும், வடிவக் கூறுகளையும், திருப்பெயர்களையும் சுட்டிக் காட்டியுள்ள திறம் கண்டின்புறத் தக்கதாகும்.

வடிவக் கூறுகள்

பாதாதி கேச வருணனையாகச் சிவன் திருவடிவக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

கூறுகளைத் திருக்கோழம்பப் பதிகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

திருவடி

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியினை

கோழம் பத்துறை கூத்தன் குரைகழல் 5-64-1
கோழம்பத்தான் அடி 5-64-8
மால் அயன் வந்தடி பரவ 5-64-9

என்று அப்பர் குறிப்பிட்டுள்ளார்.

கால் விரல்கள்

விற்றானை வல்லரக்கர் விரல் வேந்தனைக்
குற்றானைத் திருவிரலால் 2-13-8

எனுந் தொடரால் அரக்கன் இராவணனைத் தம் கால் விரலால் அடர்த்தருளியமையினைச் சம்பந்தர் காட்டியுள்ளார்.

செய்யான்

செம்மை நிறமுடைய சிவன் செய்ய மேனித் திறத்தினைச் சம்பந்தர்

கோழம்பம் மேவிய செய்யானை 2-13-2

என்று குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

நீற்றான்

மேனியின் கண் அணிந்துள்ள திருநீற்றினை *நீற்றான்* எனுந் தொடரால் சம்பந்தர் சுட்டியுள்ளார்.

கைகள்

சிவன் திருக்கரங்களை *கையானை* எனுந் தொடரால் சுட்டிக் காட்டியுள்ள சம்பந்தர் அவர்தம் திருக்கரங்களில் மான், மறி ஆசியவற்றை ஏந்தியுள்ளமையினை *மான் மறி யேந்திய* எனுந் தொடரால் குறித்துக் காட்டியுள்ளார். மேலும் சிவன் முப்புரங்களை வென்றபோது தம் திருக்கரங்களில் ஏந்திய *வில்* ஆயுதத்தினை, *சுடுகணையால் புரமூன்றெய்த வில்லான்* [2-13-7] எனுந் தொடரால் சுட்டியுள்ளார்.

கண்டம்

சிவன் திருக்கண்டத்தினைச் சம்பந்தர் சுட்டும் பொழுது, *மையான கண்டனை* [2-13-2] என்று கண்டத்தின் மைநிற வண்ணத்தினைத் தீட்டிக் காட்டியுள்ளார்.

காதுகள்

சிவன் திருக்காதுகளையும் அவற்றில் அணிந்துள்ள அணிகலன்களையும் சம்பந்தர்,

வெண்குழை தோடு விளங்கிய காதன் 2-13-3

எனுந் தொடரால் குறிப்பிட்டுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

நா

வேதம் ஓதும் சிவன் திருநாவினை *வேத நாவர்* [5-64-6] எனுந் தொடரால் நாவரசர் சுட்டியுள்ளார்.

சடைமுடி

ஜடாதரன் எனப் பெறும் சிவன் திருச்சடை முடியழகின் திறத்தினை,

நீள் சடை	2-13-1
சடையானை	2-13-4
நளிர்கொள் நீள் சடை	5-64-5
பின்னல்வார் சடை	5-64-7

என்று ஆன்றோர் இருவரும் புனைந்துரைத்திருக்கக் காணலாம்.

கங்கை நதி

கங்கை நதியை முடியின்கண் அணிந்துள்ள சிவன் கங்காதர வடிவ மாண்பினை

நீள் சடைமேல் நிறைவுள்ளதோர் ஆற்றான் 2-13-1

எனுந் தொடரால் சம்பந்தர் சுட்டியுள்ளார்.

அணிந்துள்ள மாலை

சிவன் அணிந்துள்ள மாலையாகக் கொன்றை மாலையினை சம்பந்தர், *கொன்றையம் போதணி தாரான்* [2-13-5]

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

எனுந் தொடரால் குறித்துள்ளார்.

சிவன் அபிடேகப் பொருள்கள்

அபிடேகப் பிரியர் என்று போற்றப் பெறும் சிவன் ஆடிய அரும் பொருள்களாக, *தேன் நெய் பாலும் திகழ்ந்தாடிய மெய்யான்* [2-13-2] என்று சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.

வாகனமும் கொடியும்

சிவன் வாகனமாகவும் கொடியாகவும் ரிஷபம் எனப் பெறும் ஏறு திகழ்வதனை, *வெள்ளேற்றின் கொடியானை* [2-13-9], என்று சம்பந்தப் பெருந்தகையும், *விடைக்கொடியார்* [5-64-6] என்று அப்பர் பெருந்தகையும் விடைக் கொடியையும் *ஏற்றானை* [2-13-1] என்று சம்பந்தர் ஏறு வாகனத்தையும் குறித்திருக்கக் காணலாம்.

கயிலை மலை

திருக்கோழம்பத்துறை புண்ணியன் தென்கயிலை மலையினில் உறைந்து ஆளும் கபாலியாகவும் நாவரசர், *கயிலை நன் மலையாளும் கபாலியை* [5-64-2] என்று குறித்துள்ளார்.

திருப்பெயர்கள்

சிவன் திருப்பெயர்களாக, அமரர்கோ, அத்தன் ஆதி, ஈசன், உயிர், உடையான், ஊரான், ஏற்றான், கூத்தன், சடையான், செய்யான், நல்லான், நாதன் முதலானவற்றைத் திருக்கோழம்பப் பதிகங்கள் சுட்டியுள்ளன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

திருவடிவங்கள்

சிவனருளையே கண்ணாகக் கண்டு சிவன் இப் படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் இவன் இறை வன் என்று நம் அனைவரும் கண்ணாரக் கண்டு மகிழும் வண்ணம் அடையாளம் காட்டிப் போந்துள்ளனர் நம் அருளாளர்கள். அவ்வடிவங்கள் பலவற்றுள் திருக் கோழம்பப் பதிகங்களுள் காணப்பெறும் சிவ வடிவங்களை ஈண்டுக் காண்பாம்.

சிவன் திருமுகங்கள் ஐந்தினின்றும் தோன்றிய இருபத்து ஐந்து வடிவங்களை மாகேஸ்வர வடிவங்கள் என்று சிற்பாகம நூல்கள் குறிப்பிட்டுக் கூறும். அவ்வடி வங்கள் இருபத்து ஐந்தனுள் பத்து வடிவங்களை இத்தலப் பதிகங்கள் குறித்துக் காட்டியுள்ளன.

ஈசான மூர்த்த வடிவங்கள்

சிவன் ஐந்து திருமுகங்களுள் உச்சி நோக்கிய ஈசான முக வடிவங்களாக சோமாஸ்கந்தர், நடராசர், இடபாரூடர், கல்யாணசுந்தரர், சந்திரசேகரர் முதலான ஐந்து வடிவங்கள் சுட்டப்பெறும். அவற்றுள் நடராசர், இடபாரூடர், கல்யாணசுந்தரர் முதலான வடிவங்கள் இத்தலப் பதிகங்களுள் இடம் பெற்றுள்ளன.

நடராசர்

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நம்பன் நடராசப் பெருமானின் கூத்தாடும் திருவடிவம், *கோழம்பத்துறை கூத்தன்* [5–64–1], *கோழம்பத்துள் மகிழ்ந்தாடும் கூத்தன்* [5–64–4] என்று நாவுக்கரசரால் குறிப்பிடப் பெற்றுள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

இடபாரூடர்

திருமாலே இடபமதாய்ச் சிவபெருமானைத் தாங்கிய திருவடிவம் இதுவாகும். இவ்வடிவினை ஏற்றான் எனுந் தொடரால் சம்பந்தர் சுட்டியுள்ளார்.

கல்யாணசுந்தரர்

உமை மணாளனாகச் சிவன் தோன்றும் கல்யாண சுந்தரத் திருக்கோலம். *மயிலியல் மலை மாதின் மணாளனை* [5-64-2] என்று நாவரசரால் குறிக்கப் பெற்றுள்ளது.

தத்புருஷ மூர்த்த வடிவங்கள்

பிட்சாடனர், காமாரி, காலாரி, சலந்தராரி, திரி புராரி எனவரும் தத்புருஷ மூர்த்த வடிவங்கள் ஐந்தனுள் பிட்சாடனர், காலசம்ஹாரர், திரிபுராரி முதலான மூன்று வடிவங்கள் இத்தலப் பதிகங்களில் குறிப்பிடப்பெற் றுள்ளன.

பிட்சாடனர்

தாருகாவனத்தில் சிவன் பிட்சாடன வடிவினராய்ப் பிரம்ம கபாலத்தினை ஏந்திச் சென்ற திருக்கோலம், *தண்மலரான் சிரமேந்திய விடையின்* எனும் தொடரால் சம்பந்தரால் குறிப்பிடப்பெற்றுள்ளது.

காலாரி

மார்க்கண்டேயனுக்காகக் காலனைக் காலால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation,

தடிந்த இவ்வடிவம், கொடுங்காலனைச் செற்றானை என்று சம்பந்தரால் குறிக்கப்பெற்றுள்ளது.

திரிபுராரி

முப்புரம் எரிசெய்த அச்சிவன் வடிவினைச் சம்பந்தர்,

விண்டார்கள் தம்புரம் மூன்றுடனே வேவக் கண்டான்
சுடுகணையாற் புரமூன்றெய்த வில்லான்

எனவருந் தொடர்களால் சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.

அகோர மூர்த்த வடிவங்கள்

கஜாரி, வீரபத்திரர், தெட்சிணாமூர்த்தி, கிராதர், நீலகண்டர் எனவரும் அகோரமூர்த்த வடிவங்கள் ஐந்தனுள் கஜாரி, தெட்சணாமூர்த்தி, நீலகண்டர் முதலான மூன்று சிவவடிவங்கள் இத்தலப் பதிகங்களுள் குறிப்பிடப் பெற்றுள்ளன.

கஜாரி

தாருகாவன முனிவர்கள் இழைத்த வேள்வியினின்றெழுந்த யானையைக் கொன்று அதன் தோலை உரியாடையாகப் போர்த்த சிவன் கஜயுக்த வடிவினை, கொல்லானை உரியானை என்று சம்பந்தரும்,

தளிர்கொள் மேனியன் தான் மிக அஞ்சவோர்
பிளிறு வாரணத் தீருறி போர்த்தவன்

என்று நாவரசரும் குறிப்பிட்டுள்ளனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

தெட்சனாமூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யாறங்க மதைச் சனகாதி முனிவர்கள் நால்வர்க்கு எடுத்துரைத்த சிவன் ஆலமர் செல்வ வடிவினை *பண்டாலின் நீழலானை* என்று சம்பந்தர் குறித்துள்ளார்.

நீலகண்டர்

பாற்கடலைத் தேவர்கள் கடைந்தபோது எழுந்த ஆலகால விடத்தினை உண்டு தன் கண்டத்தில் அமைத்த சிவன் நீலகண்ட வடிவம் *மையான கண்டனை* எனும் தொடரால் சம்பந்தரால் சுட்டப் பெற்றுள்ளது.

சத்யோசாத மூர்த்த வடிவங்கள்

அர்த்த நாரீஸ்வரர், இலிங்கோற்பவர் முதலான சிவன் சத்யோசாத மூர்த்த வடிவங்கள் இரண்டனைக் கோழம்பப் பதிகத்துள் சம்பந்தர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அர்த்தநாரி

மாதொரு கூறனாய சிவன் அர்த்தநாரீஸ்வர வடி வினைச் சம்பந்தர்,

அழகமர் மென்முலை யாளையோர் கூற்றான்
வெண்குழை தோடு விளங்கிய காதன்
தையலோர் பால் மகிழ்ந்தோங்கிய சீரான்

எனவரும் தொடர்களால் சுட்டியுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

ஆலிங்கோத்பவர்

பிரமனும் மாலும் முயன்று அடிமுடிகாண இயலா சிவன் இலிங்கோற்பவ வடிவம், *நெடியானோடு அய னறியாவகை நின்றதோர் படியான்* என்று சம்பந்தரால் பேசப் பெற்றுள்ளது.

இராவண அனுக்ரக மூர்த்தி

இராவணனுக்குச் சிவன் அருளிய வடிவம். இவ் வடிவ மாண்பு சம்பந்தர் பதிகந்தொறும் எட்டாவது பாட லிலும், நாவரசர் பதிகந்தொறும் ஈற்றுப் பாடலிலும் பேசப் பெற்றுள்ளன. ஆயினும் இவ்வடிவம் தற்காலத்து திருவா வடுதுறை ஆதீனத் திருக்கோயிலான திருவிடைமருதூர் தவிர ஏனைய ஆலயங்களுள் வழிபடு மூர்த்தமாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வடிவினை,

விற்றானை வல்லரக்கர் விறர் வேந்தனைக்
குற்றானைத் திருவிரலால்

என்று சம்பந்தரும்,

துட்ட னாகிமலை யெடுத்து அ.ந்தின்கீழ்ப்
பட்டு வீழ்ந்து படர்ந்துய்யப் போயினான்

என்று அப்பரும் சுட்டியுள்ளனர்.

ஆயினும் இவ்வடிவம் சிவன் மகேஸ்வர வடிவங் களிலோ, சிவன் அஷ்டாங்க வடிவங்களிலோ இடம் பெறாமை குறிப்பிடத்தக்கது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

இயற்கை வருணனை

இயற்கை எழில் சூழ்ந்த திருக்கோழம்பத் தல வருணனையை ஞானசம்பந்தரும் நாவரசரும் சிறப்பாகக் குறித்துள்ளனர்.

திருக்கோழம்பத்தைச் சூழ்ந்துள்ள பூம்பொழில் களை குளிர்பொழில், கடிபொழில், செறுபொழில், கடிகமழ்பொழில், கடியாரும்பொழில் என்று சம்பந்தர் குறித்துள்ளார்.

குயிலும் அன்னமும்

அழகிய பொழில்களில் குயில்கள் துயில்வதை குயில் பயில் பொழில் எனவும், அன்னங்கள் பெடையுடன் உலவுவதனை, அன்னமார் வயல் எனவும் நாவரசர் குறித் துள்ளார்.

பொழில் மலர்கள்

பீடுடைக் கொத்தலர் தண்பொழில் என்று சம்பந் தரால் குறிப்பிடப்பெற்றுள்ள பூம்பொழில்களில் காணப் பெறும் மலர்களை

தாழம்பூ மணம் நாறிய தாழ்பொழில்
கோடல் மலர் பூத்தலர்
குரவார் பொழில்
கொட்டம் நாறிய

என்று நாவரசர் குறித்துள்ளமை காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

வயல் வெளிகள்

கோழம்பத்தைச் சுற்றியுள்ள வயல் வெளி அழகினை, *குளிர்கொள் நீள் வயல், கூழைவாய் வயல்* என்று நாவரசர் குறித்துள்ளார்.

வணங்குவார் பெறும் பயன்

இத்தலப் பதிகத்தை ஓதுவார் பெறும் பயனாக,

பண்கொளப் பாடவல்லார்க் கில்லை பாவமே

என்று சம்பந்தர் குறித்துள்ளார். அது தவிர இத்தலத்திறை வரைப் போற்றுவதன் வாயிலாகப் பெறத்தக்க பயன்களாக,

இடர் ஏகும், இட்ர் ஒல்கும், இடர்கெடும்
வினைமேவா, வினைநையா, வினைபற்றா,
உள்ளம்குளிரும், அல்லல் அறும், செல்வம்கூடும்,
அமரலோக மதாளுடையார்

எனப் பலவற்றை இத்தலப் பதிகங்கள் சுட்டிக் காட்டி யுள்ளமை காண்லாம்.

இவ்வாறு பல்வகைத் திறத்தாலும் இத்தலப் பதி கங்கள் சிறந்திருக்கக் காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

திருக்கோழம்பத் தேவாரத் திருப்பதிகங்கள்

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளியது

இரண்டாந்திருமுறை
பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நீற்றானை நீள்சடைமேல் நிறைவுள்ள தோர்
ஆற்றானை அழகமர் மென் முலையாளை யோர்
கூற்றானைக் குளிர்பொழில் கோழம்பம் மேவிய
ஏற்றானை ஏத்துமின்நும் இடர்ஏகவே. 1

[பொழிப்புரை] உங்களது துன்பம் நீங்க, திருநீறு அணிந்து சடையில் கங்கையும் இடப்பால் உமாதேவியையும் கொண்டு குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த திருக்கோழம் பத்தில் உறையும் எம்பிரானை ஏத்துங்கள்.

மையான கண்டனை மான்மறி ஏந்திய
கையானைக் கடிபொழில் கோழம்பம் மேவிய
செய்யானைத் தேன்நெய் பாலும் திகழ்ந்தாடிய
மெய்யானை மேவுவார்மேல் வினைமேவாவே. 2

[பொ-ரை] நீலகண்டத்துடன் கையில் மானை ஏந்தி திருக்கோழம்பத்தில் தேன், நெய், பால் இவற்றை ஆடிய திருமேனியனை அடைந்தால் வினைகள் வந்து அடையா.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

ஏதனை ஏதமிலா இமையோர் தொழும்
வேதனை வெண்குழை தோடு விளங்கிய
காதனைக் கடிபொழில் கோழம்பம் மேவிய
நாதனை ஏத்துமின் நும்வினை நையவே. 3

[பொ–ரை] குற்றம் குணம் யாவற்றிற்கும் காரண மானவனை, குற்றமற்ற தேவர்கள் தொழும் வேதநாய கனை, காதில் வெண் குழையும், தோடும் அணிந்தவனை, திருக்கோழம்ப மேவிய நாதனை உங்கள் வினைகள் நைந் தொழிய வழிபடுங்கள்.

சடையானைத் தண்மலரான் சிரம் ஏந்திய
விடையானை வேதமும் வேள்வியு மாயனன்கு
உடையானைக் குளிர்பொழில்சூழ் கோழம்ப மேவிய
உடையானை உள்குமின் உள்ளம் குளிரவே. 4

[பொ–ரை] சடாமகுடத்துடன் கையில் பிரம கபாலத்தை ஏந்தி, காளை மீதமர்ந்து, வேதமும், வேள்வியு மாய் திருக்கோழம்பத் தலத்தில் இருப்பவனுமான எமது இறைவனை உங்கள் உள்ளம் குளிர நினைமின்கள்.

காரானைக் கடிகமழ் கொன்றையம் போதணி
தாரானைத் தையல் ஓர்பால் மகிழ்ந்தோங்கிய
சீரானைச் செறிபொழில் கோழம்ப ம் மேவிய
ஊரானை ஏத்துமின் நும்இடர் ஒல்கவே.5

[பொ–ரை] உங்கள் துன்பம் அகல, கோழம்பத்தை இடமாகக் கொண்டு, மேகம் போல் வரையாது வழங்கு பவனை கொன்றை மாலையைச் சூடி உமையை ஒருபால் கொண்டவனை ஏத்துமின்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

பண்டுஆலின் நீழலானைப் பரஞ் சோதியைப்
விண்டார்கள்தம் புரம்மூன்றும் உடனே வேவக்
கண்டானைக் கடிகமழ் கோழம்பம் கோயிலாக்
கொண்டானைக் கூறுமின் உள்ளங் குளிரவே. 6

[பொ–ரை] கல்லாலின் புடையமர்ந்து அறம் உரைத்த ஒளிவடிவானவனும், முப்புரங்களை அழல் ஆக்கியவனும், கோழம்பத்தை தம் இருப்பிடமாகக் கொண்டவனும் ஆகிய பெருமானின் புகழை உங்கள் உள்ளங் குளிரக் கூறுங்கள்.

சொல்லானைச் சுடுகணையால் புரம்மூன்று எய்த
வில்லானை வேதமும் வேள்வியும் ஆனானைக்
கொல்லானை உரியானைக் கோழம்பம் மேவிய
நல்லானை ஏத்துமின் நும்மிட்டர் நையவே. 7

[பொ–ரை] சொல்லும் பொருளுமானவனும், சுடுகணையால் புரம் மூன்றை எரித்த வில்லை உடைய வனும், வேதமும் வேள்வியுமானவனும், கொல்யானை யின் தோலைப் போர்த்தவனும், கோழம்பத்துறையும் நல்ல வனுமான இறைவனை இடர் நீங்க ஏத்துமின்.

விற்றானை வல்அரக்கர் விறல் வேந்தனைக்
குற்றானைத் திருவிரலால் கொடுங் காலனைச்
செற்றானைச் சீர்திகழும் திருக் கோழம்பம்
பற்றானைப் பற்றுவார்மேல் வினை பற்றாவே. 8

[பொ–ரை] விற்படை உடையவனை வலிய அரக் கர் தலைவனான இராவணனைக் கால்விரலால் ஊன்றி அவன்வலிமையைத் தொலைத்தவனை, கொடியகாலனைக் காலால் உதைத்தவனை, பெருமைமிகு கோழம் பத்தை விரும்பி இருப்பவனை பற்றுவார்களை வினை பற்றா.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

நெடியானோடு அயன் அறியாவகை நின்றதோர்
படியானைப் பண்டங்க வேடம் பயின்றானைக்
கடியாரும் கோழம்பம் மேவிய வெள்ளேற்றின்
கொடியானைக் கூறுமின் உள்ளங் குளிரவே. 9

[பொ–ரை] அரியும் அயனும் அறியாது அழலாய் நின்றவனை, பண்டரங்கக் கூத்தனை, கோழம்பத்தில் விடைக் கொடியுடன் இருப்பவனை உள்ளங் குளிரக் கூறுங்கள்.

புத்தரும் தோகைஅம் பீலிகொள் பொய்ம்பொழில்
பித்தரும் பேசுவ பேச்சல்ல பீடுஉடைக்
கொத்தலர் தண்பொழில் கோழம்பம் மேவிய
அத்தனை ஏத்துமின் அல்லல் அறுக்கவே. 10

[பொ–ரை] புத்தர்களும், கையில் மயில் பீலியை ஏத்தி மயக்க உணர்வினராய் திரியும் சமணரும் கூறுவது நல்லுரைகள் ஆகா. சிறப்புடைய சோலைகள் சூழ்ந்த கோழம்ப மேவிய அத்தனை ஏத்துங்கள். உங்கள் துன் பங்கள் அகலும்.

தண்புனல் ஓங்கு தண்ணந்தராய் மாநகர்
நண்புடை ஞானசம் பந்தன்நம் பான்உறை
விண்பொழில் கோழம்பம் மேவிய பத்திவை
பண்கொளப் பாடவல்லார்க்கு இல்லை பாவமே. 11

[பொ–ரை] குளிர்சோலைகள் சூழ்ந்த சீகாழிப் பதியினராகிய ஞானசம்பந்தர் உயர்ந்த பொழிலால் சூழ்ந்த கோழம்பத்திறைவன் மீது பாடிய பத்துப் பாடல்களையும் பாட வல்லவர்கட்குப் பாவம் இல்லை.

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய
ஆறாந் திருமுறை
திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

வேழம்பத்து வர் வேண்டிற்று வேண்டிப் போய்
ஆழம்பற்றி வீழ்வார் பல வாதர்கள்
கோழம்பத்து உறைகூத்தன் குரை கழல்
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே. 1

[பொ–ரை] கீழ்மக்கள் ஐம்புலன்களின் வழிவரும் வஞ்சனையுள் சிக்குண்டு அதன்வழி வினைகளைப் பெருக்கி, கொடுநரகில் வீழ்வர். ஆனால் கோழம்பத் துறையும் இறைவன் திருவடிகளைத் தொழுது வணங்கு பவர்கள் மிகவும் மேலோர் ஆவர்.

கயிலை நன்மலை ஆளும் கபாலியை
மயில்இயல் மலைமாதின் மணாளனை
குயில்பயில் பொழில் கோழம்பம்மேய என்
உயிரினை நினைந்து உள்ளம் உருகுமே. 2

[பொ–ரை] கயிலை மலை மேவுங் கபாலியை, மயில் போலும் சாயலையுடைய உமாதேவியின் மணா ளனை, குயில்கள் கூவும் சோலைகள் சூழ்ந்த என் ஆருயிர் அனைய இறைவனை நினைந்து என் உள்ளம் உருகும்.

வாழும் பான்மையர் ஆகிய வான்செல்வம்
தாழும் பான்மையர் ஆகித்தம் வாயினால்
தாழம் பூமணம் நாறிய தாழ்பொழில்
கோழம் பா!எனக் கூடிய செல்வமே. 3

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

[பொ–ரை] ஒருவர் இவ்வுலகில் எக்காலத்தும் பெருஞ் செல்வத்துடன் வாழ்வாங்கு வாழ்வதற்குக் காரணம்? தாழம்பூ மணங் கமழும் திருக்கோழம்பத் திறை வனின் திருநாமத்தை கூறி வந்ததால் ஆகும்.

பாடல் ஆக்கிடும் பண்ணொடு பெண்இவள்
கூடல் அக்கிடுங் குன்றின் மணல்கொடு
கோடல் பூத்தலர் கோழம்பத் துள்மகிழ்ந்து
ஆடும் கூத்தனுக்கு அன்பு பட்டாள் அன்றே. 4

[பொ–ரை] இப்பெண் காந்தள் மலர்கள் பூத்து விளங்கும் கோழம்பத்துள் மகிழ்ந்திடும் கூத்தனுக்கு ஆட் பட்டு, பண்ணொடு பயிலும் பாடலைப் பாடுவாளாயினாள். மேலும்குன்றின்மணலைக்கொண்டுதலைவன்வருவானோ வாரானோ என்று கூடல் இழைப்பாளும் ஆயினாள்.

தளிர்கொள் மேனியள் தான்மிக அஞ்சவோர்
பிளிறு வாரணத்து ஈர்உரி போர்த்தவன்
குளிர்கொள் நீர்வயல் கோழம்பம் மேவினான்
நளிர்கொள் நீர்சடை மேலும் நயந்ததே. 5

[பொ–ரை] மாந்தளிர் மேனியளாகிய உமாதேவி அஞ்ச பிளிறும் யானையின் தோலைப் போர்த்தவனாகிய கோழம்பத்து இறைவன் சடைமேல் கங்கையை நயந்தது வியப்புக்குரியது.

நாதர்ஆவார் நமக்கும் பிறர்க்கும் தாம்
வேதநாவர் விடைக் கொடியார் வெற்பில்
கோதை மாதொடும் கோழம்பம்கோயில் கொண்ட
ஆதி பாதம் அடைய வல்லார்களே. 6

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

[பொ–ரை] சிவபிரான் மண்ணுலகத்தவர்க்கு மின்றி ஏனைய உலகத்தவர்கட்கும் தலைவர் ஆவார். இவர் விடைக்கொடியை உடையவர். உமாதேவியுடன் கோழம்பத்தில் உறைவார். இவருடைய திருவடியை அடைபவர்கள் வல்லவர் ஆவர்.

முன்னை நான்செய்த பாவம் முதல்அறப்
பின்னை நான்பெரிதும் அருள் பெற்றதும்
அன்ன மார்வயல் கோழம்பத் துள்அமர்
பின்னல் வார்சடை யானைப் பிதற்றியே. 7

[பொ–ரை] நான் [நாவுக்கரசர்] முன்செய் தீவினை காரணமாய் சமண் சார்ந்து பின் அதினின்றும் நீங்கி மீண்டும் சைவம் சார்ந்து நல்லருள் பெற்றுய்யக் காரணம்? அன்னம் வைகும் வயல் சூழ் கோழம்பத்து உறையும் இறைவனின் திருநாமத்தைக் கூறியதால் ஆகும்.

ஏழை மாரிடம் நின்றுஇரு கைக்கொடுஉண்
கோழை மாரொடும் கூடிய குற்றமாம்
கூழை பாய்வயல் கோழம்பத் தான்அடி
ஏழையேன் முன் மறந்துஅங்கு இருந்ததே. 8

[பொ–ரை] இரு கைகளையும் ஏந்தி பெண்பாலார் இடும் உணவு கொண்டு சமண் சார்பில் இருந்த குறைக்குக் காரணம் வயல்கள் சூழ்ந்த கோழம்பத்துறையும் பெருமான் திருவடியை முன்னர் மறந்தமையால் ஆகும்.

அரவு அணைப்பயில் மால்அயன் வந்துஅடி
பரவ னைப்பர மாம் பரஞ்சோதியைக்
குரவ வனைக்குர வார்பொழில் கோழம்பத்து
உரவ னைஒரு வர்க்குஉணர்வு ஒண்ணுமே. 9

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

[பொ–ரை] பாம்பணையானாகிய திருமாலும், மலர்மேல் உறையும் நான்முகனும் வணங்க, சோதி வடிவாய் நின்ற சிவபிரான் குருவடிவாயும் விளங்கியவர். இத்தகைய இவர் கோழம்பத்தில் இருந்தருளுகிறார். இவரை முற்றும் உணர்வதற்கு அரிது.

சமர சூரபன் மாவை தடிந்தவேல்
குமரன் தாதைநல் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக்கு அன்புடைத் தொண்டர்கள்
அமர லோகமது ஆளுடை யார்களே. 10

[பொ–ரை] கொடிய சூரபதுமனை போரில் வென்று வெற்றி கொண்ட வேற்படைக் குமரனின் தந்தை யாகிய கோழம்பத்திறைவனாகியவனும், தேவர்தம் தலைவனுமான பெருமானுக்கு அன்புடைத் தொண்டர் வானுலகத்தை ஆளும் உரிமை உடையவராவர்.

துட்ட னாகி மலையெடுத்து அ.·.தின்கீழ்ப்
பட்டு வீழ்ந்து படர்ந்துஉய்யப் போயினான்
கொட்டம் நாறிய கோழம்பத்து ஈசன்என்று
இட்ட கீதம் இசைத்த அரக்கனே. 11

[பொ–ரை] கொடிய அரக்கனாகிய இராவணன் கயிலை மலையை எடுக்க முற்பட்டு அழிய நேர்ந்த சமயம் கொட்ட மணம் வீசும் கோழம்பத்து இறைவனைப் பாடின தால் உய்ந்து அருள் பெற்றான்.

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

வேற்றுத் தலப்பதிகங்களில் திருக்கோழம்பம்

ஞானசம்பந்தர் அருளிய க்ஷேத்திரக்கோவை

மாட்டூர் மடப்பாச்சிலாச் சிராமம்
முண்டீச்சரம் வாதவூர் வாரணாசி
காட்டூர் கடம்பூர் படப்பக்கம் கொட்டும்
கடல் ஒற்றியூர் மற்றுஉரை பூர்அவையும்
கோட்டூர் திருஆமாத்தூர் கோழம் பமும்
கொடுங் கோவலூர் திருக் குணவாயில்
... ...

திருவிடைமருதூர் - திருத்தாண்டகம்

ஆல நிழலிருப்பர் ஆகா சத்தர்
அருவரையி னுச்சியர் ஆணர் பெண்ணர்
காலம் பலகழித்தார் கறைசேர் கண்டர்
கருத்துக்குச் சேயார்தாங் காணா தார்க்குக்
கோலம் பலவுடையர் கொல்லை யேற்றார்
கொடுமழுவர் கோழம்பம் மேய ஈசர்
ஏல மணநாறும் ஈங்கோய் நீங்கார்
இடைமருது மேவி யிடங் கொண்டாரே.

பொது - க்ஷேத்திரக்கோவை - திருத்தாண்டகம்

ஆரூர்மூ லட்டானம் ஆனைக் காவும்
ஆக்கூரில் தான்தோன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேரா வூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

சூரார் குறுக்கைவீ ரட்டானமும்
கோட்டூர் குடமூக்குக் கோழம் பமும்
காரார் கழுக்குன்றும் கானப் பேரும்
கயிலாய நாதனையே காண லாமே.

அடியவர்கள் வருகை,
திருநாவுக்கரசர் தரிசித்தது

நாவின் மன்னவராகிய அரசு திருநல்லூரில் சிவ பிரானது பூவார் அடிச்சுவட்டைத் தம் தலைமிது சூட்டப் பெற்று, பின் குடந்தை வழி பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூரை நோக்கி வருகையில்,

நாலூர்தென் திருச்சேறை குடவாயில் நறையூர்சேர்
பாலூரும் இன்மொழியாள் பாகனார் கழல்பரவி
மேலூர்தி விடைக்கொடியார் மேவுமிடம் பலபாடிச்
சேலூர்தண் பனைசூழ்ந்த தென்திருவாஞ் சியம்அணைந்தார்.
[பெ.பு. தி.நா.பு.பாட்டு–216]

இங்கு பாடலில் குறிக்கப்பெற்றுள்ள மேவுமிடம் என்பது அரிசிற்கரைபுத்தூர், சிவபுரம், நீலக்குடி, திருக் கோழம்பம் இவற்றைக் குறிக்கிறது.

திருஞானசம்பந்தர் வருகை

பரசமய கோளரியாகிய ஞானசம்பந்தர் தம் ஐந்தாம் யாத்திரையில் கோமுத்திபுரமாகிய திருவாவடுதுறையில் தம் தந்தையார் செய்யும் வேள்விக்கு அம்பொன் ஆயிரம் பெற்று அங்கு தங்கிப் பின் புறப்பட்டு அடுத்து இத்திருக் கோழம்பம் வந்து பெருமானைப் பாடிப் பின் இதன் அருகில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

உள்ள திருவைகல் மாடக் கோயிலை வந்து அடைந்தார். பின்,

அண்ணலார்திரு ஆவடு துறை அமர்ந்தாரை
உள்நிலாவிய காதலி னால்பணிந் துறைந்து
மண்ணெலாம் உயவந்தவர் போந்துவார் சடைமேல்
தெண்ணிலாஅணி வார்திருக் கோழம்பம் சேர்ந்தார்.

கொன்றை வார்சடை முடியாரைக் கோழம்பத்திறைஞ்சி
என்றும் நீடிய இன்னிசைப் பதிகம்முன் இயம்பி
மன்று ளார்மகிழ் வைகல்மாடக்கோயில் மருங்கு
சென்று சார்ந்தனர் திருவளர் சிரபுரச் செல்வர்.

[பெ.பு. தி.ஞா.பு. பாட்டு– 431,432]

உமாபதி சிவாசாரியார் அருளிய திருப்பதிகக் கோவை
இரண்டு பதிகங்கள் உள்ள தல வரிசை.

கடைமுடியே ஓணகாந்தண் தளி கோட்டூர் வைகல் மாடக்கோயில் ... இப்பால் [இருபதிகங்கள் உள்ள] குடவாயில், புனவாயில், தூங்கானைமாடம், கோழம்பம், அவளிவணல்லூர், கோலக்காவே. 9

உமாபதி சிவாசாரியார் அருளிய திருப்பதிகக் கோவை

ஆறைவடதளி திருவலஞ்சுழியே குடமூக்கதனிற் கீழ்கோட்டம் காரோணம் நாகேசம் கூறும் இடைமருது குரங்காடுதுறை, நீலக்குடி வைகன் மாடக்கோயில் நல்லம் கோழம்பஞ் சாறமராவதுறை தண்துருத்தி திருவழந்தூர், சகம் புகழ் மாயூரம் விளநகர் பறியலூரே, வீறுசெம்பொன் பள்ளி நனிபள்ளி வலம்புரமே வியன் தலைச்சங்காடு ஆக்கூர் விளங்கு கடவூரே. 5

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

நிறைவுரை

குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே என்பதற்கேற்ப நாட்டு மக்களின் நலம் கருதி நமது நாட்டில் பல்லாயிரக் கணக்கான திருக்கோயில்களை நம் முன்னோர்களும் இக்காலத்து நன்மக்களும் கட்டி, சமுதாயமும் சமயமும் வளர்ந்தோங்கச் செய்துள்ளார்கள். இத்தகைய கோயில்கட்கு ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்னும் பெரியோர்களது வாக்கிற்கு ஏற்ப இக்கால மக்களாகிய நாம் நித்தம் மற்றும் புனித நாட்களிலும் சென்று வழிபட்டு உய்யும் நெறியைப் பெறவேண்டும். சைவம் செழித் தோங்க தேவாரமழை பொழிந்த ஞானசம்பந்தரும், நாவுக் கரசரும் ஏத்திப் பாடிய இப்பாடல் தலத்தைப் பக்கத்தில் உள்ள ஊரில் உள்ளோரும் தேவாரத் தல யாத்திரையைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் சிவநேசச் செல்வர் களும் இயன்ற நாட் களில் வந்து இக்கோழம்ப மேவிய கோகிலேசுவரரைத் தரிசித்து இக்கோயில் வளர்ச்சிக்கு தங்கள் தங்களது இயல்புக்கு ஏற்றவாறு, *நிதிமிகுந்தவர் பொற்குவை, நிதி குறைந்தவர் காசுகள், அதுவுமற்றவர் வாய்ச்சொல், கைத் தொண்டால்* பணியாற்றி அருள்மிகு சவுந்தரநாயகி உடனாய கோழம்ப நாதரின் அருளைப் பெற்று பெருவாழ்வு வாழ்வார்களாக.

வாழ்க கோகிலேசுவரரின் திருவருள்
வாழ்க சீர் அடியாரெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

சிவம்யம்



திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka



Center for Shaiva Studies, Pondicherry Collection